**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**S.C.No.138/2013**

Date: 29.02.2024.

**PW-30: பால்ராஜ்**

சாட்சி இன்று மீண்டும் மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் 1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**A1 to A3, A5, A6, A7, A9, A13 to A17 present. A8, A11 & A18 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed.**

**1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சி ஜானகி எனது உறவினர் என்றால் நெருங்கிய உறவினர் இல்லை துாரத்து உறவினர். கொலைகள் நடந்து 15 நிமிடங்களுக்கு பிறகு சம்பவம் பற்றி கேள்விபட்டு நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். வங்குடிகிராமத்தில் தான் எனது அலுவலகம் இருக்கிறது என்றால் சரிதான். எங்களது அலுவலகத்திலிருந்து சம்பவ இடத்திற்கு நடந்து சென்றோம். நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள காடுவெட்டி பேருந்து நிறுத்தத்தின் அருகில் கடைகள் இருக்கிறது.

அந்த கடையில் இருந்த நபர்கள் யாரையும் சாட்சியாக இருக்க வரும்படி ஆய்வாளர் அழைக்கவில்லை என்றால் சரிதான். நான் போலிசார் கேட்டுகொண்டதன்பேரில் சாட்சி கையொப்பம் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். நான் சாட்சி கையொப்பம் செய்துள்ள ஆவணங்களில் கையொப்பம் செய்தபோது இவ்வழக்கின் எதிரிகள் யாரையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.